7. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் கட்சித் தலைவர்களையும் அரசையும் கலந்து ஆலோசித்துப் பேரவையின் நிகழ்ச்சி குறித்த கீழ்க்கண்ட மாற்றத்தைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை, தீயணைப்புப் பணிகள் மற்றும் மாநில ஆயத்தீர்வைத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீதும் அவற்றிற்கு முன்மொழியப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் மீதான விவாதமும் பதிலுரையும் மீண்டும் 9–4–1984 அன்று தொடரும். நாளையதினம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி சிறைச்சாலைகள் மற்றும் நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் எடுத்துக் கொள்ளப்பெறும்.

ஏற்கனவே 9–4–1984 அன்று எடுத்துக் கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த முத்திரைத்தாள்கள் நிர்வாகம், பத்திரப்பதிவு மற்றும் பால் வழங்கு திட்டங்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் என்று எடுத்துக்கொள்ளப் பெறும் என்பது அலுவல் ஆய்வுக் குழுவைக் கலந்தாலோசித்துப் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 31–3–1984 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

152. வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 29–11–1981 ஆம் நாளிட்ட II (1)-சி. டி. மற்றும் ஆர். ஈ.-583(ஏ) 81-ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 28–12–1983 ஆம் நாளிட்ட 1,466 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு பொது விற்பனைவரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் ச-1959) 53 (5) பிரிவின் கீழ்பேரவை முன் வைக்கப் பெற்றது].

1984 மார்ச் 30]

153. சேலம் நகர கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் உள்ள "லாக்கப்" அறையில் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ஆம் நாளன்று தெய்வமணி என்ற குள்ளுண்டு இறந்த போனது பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட திரு. ஏ. எம். நஞ்சப்பன் விசாரணை குழுவின் அறிக்கை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

104. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

105. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் (சிவில்) மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை.(தமிழ், ஆங்கிலம்.)

106. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1971–72 முதல் 1975–76 வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்பதாம் அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

107. தமிழ்நாடு வேளாண்-தொழில்கள் கழகத்தின் செயல் முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

108. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கிராம ஊழியர்கள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகளை வகுப்பது குறித்து வருவாய்த் துறையின் 24–6–1983 ஆம் நாளிட்ட 1,131 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.